# இஸ்லாமிய குழந்தை வளர்ப்பில் பெற்றோர்களின் கர்ப்பகால நடைமுறையின் தாக்கம்: தோப்பூர்பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு

A.K.Siyana[1], M.H.M.Nairoos[2]

[1]Assistant lecturer, [2]Senior Lecturer, Depart of Islamic Studies, South Eastern University of Sri Lanka

aksiyana94@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

ஒரு பெண் தனது வயிற்றில் சிசுவை சுமக்கின்ற காலப்பிரிவு கர்ப்பகாலம் எனக்கொள்ளப்படுகின்றதுடன் இக்காலப்பகுதியில் பெற்றோர்கள் மிக அவதானமாக நடந்து கொள்ளவேண்டியது அவசியமென அறிஞர்கள் விளக்குகின்றனர். தாய்மார்களது உடலும், உள்ளமும் ஆரோக்கியமாக இருக்கவேண்டிய காலப்பிரிவாகவும் இது காணப்படுகிறது. இக்கட்டத்தில் ஒரு தாய் கவனயீனமாக செயற்படுவாளாயின் அவளது எதிர்கால குழந்தையிலும் இதனது தாக்கம் இடம்பெறுவதற்கு அதிக வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இதனடிப்படையில் இஸ்லாம் குழந்தை வளர்ப்பிற்கான முழுமையான வழிகாட்டல்களை வழங்கியிருப்பதுடன் அவற்றை பெற்றோர்கள் தனது வாழ்வில் கடைபிடிக்க வேண்டும் எனவும் இயம்புகின்றது. இதன் நிமித்தம் இஸ்லாமிய குழந்தை வளர்ப்பில் பெற்றோர்களின் கர்ப்பகால நடைமுறை: தோப்பூர் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு எனும் தலைப்பில் முஸ்லிம் தாய்மார்களின் கர்ப்பகால நடைமுறைகள் இஸ்லாமிய வழிகாட்டல்களின் அடிப்படையில் அமையப் பெற்றுள்ளனவா? என்பதனைக் கண்டறிதல் மற்றும் இவர்கள் கர்ப்பகாலங்களில் எதிர்நோக்கும் சவால்களை இணங்காணல் போன்ற நோக்கங்களைக் கொண்டதாக இவ்வாய்வு அமையப் பெற்றுள்ளதுடன் இந்நோக்கத்தை அடையும் வகையில் இஸ்லாத்தின் மூலாதாரங்களான அல்குர்ஆன், ஹதீஸ், தற்கால முஸ்லிம் சிந்தனையாளர்களின் எழுத்துக்கள், நூல்கள், கட்டமைக்கப்பட்ட வினாக்கள் அடங்கிய 200 வினாக்கொத்துக்கள் ஆய்வுப்பிரதேசத்தில் தரவுகள் பெறப்பட்டு மீளாய்வுக்குட்படுத்தப்பட்டதுடன் அளவுசார் ஆய்வாகவும் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வு முடிவுகளின்படி ஆய்வுப் பிரதேசத்தின் கர்ப்பகால குழந்தை வளர்ப்பு நடைமுறைகளில் அதிகபடியான செல்வாக்கைச் செலுத்தும் காரணியாக பெற்றோர்களினது கல்வித் தகைமை காணப்படுவதுடன் முழுமையான இஸ்லாமிய கர்ப்பகால நடைமுறைகளை பின்பற்றியவர்களாக முறைசார் கல்வியைக் கற்றவர்கள் காணப்படுகிறார்கள். மேலும் ஏனையவர்கள் முழுமையானளவில் இஸ்லாமிய கர்ப்பகால நடைமுறைகளை பின்பற்றவில்லை என்பதும் கண்டறியப்பட்டுள்ளதுடன் மேலும் கணவன் மனைவிக்கிடையில் முரண்பாடு, குடும்ப வன்முறை, தகாத வார்த்தைப் பிரயோகங்கள், மனஅழுத்தம், அதிக கவலை தரக்கூடிய நிகழ்வுகள், கணவனை நீண்டநாள் பிரிந்து இருத்தல் போன்ற விடயங்களும் கர்ப்ப காலங்களில் உளரீதியான அழுத்தங்கள் என்பன தாய்மார்களிடம் முழுமையான அளவில் இடம்பெறுவதற்கு காரணமாக உள்ளன என்ற விடயம் இவ்வாய்வு பிரதேச கர்ப்பிணித் தாய்மார்கள் எதிர்கொண்டுள்ள சவாலாக இனங்காணப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து விடுபட தாய்மார்கள் இஸ்லாமிய தூய வழிகாட்டல்களை பின்பற்றுவதன் மூலமும் கர்ப்ப காலம்

மற்றும் ஏனைய காலங்களில் இவற்றை நடைமுறைப் படுத்துவதன் மூலமும் சிறந்த ஆளுமை மிக்க ஸாலிஹான குழந்தைகளை இவ்வுலகிற்கு சமர்ப்பிக்க முடியும் என்பதும் இவ்வாய்வின் பரிந்துரையாகும்.

**திறவுச் சொற்கள்:** இஸ்லாமிய குழந்தை வளர்ப்பு, கர்ப்பகாலம், பெற்றோர்வகிபாகம்,தோப்பூர்

## 1. அறிமுகம்

கர்ப்பம் என்பது பெண்களின் வாழ்க்கையில் ஒரு மகிழ்ச்சியான மற்றும் சுவாரஸ்யமான நேரமாகும், இக்காலப்பகுதியில் பெற்றோர்கள் ஒரு குழந்தையின் வருகையை எதிர்பார்ப்பதுடன் அக்குழந்தையை வளர்ப்பதற்கும் நேசிப்பதற்கும் திட்டங்களை வகுக்கின்றார்கள். இந்த இனிமையான காலம் இயற்கையான உள் மற்றும் வெளிப்புற அழுத்தங்களால் தொந்தரவு செய்யப்படாமல் அமைதல் அவசியமாகும். பெரும்பாலான கர்ப்பிணிப் பெண்கள் கர்ப்பத்தின் உடல் அறிகுறிகளை எதிர்கொள்ளும் போது மன அழுத்தத்தையும் கவலைகளையும் அனுபவிக்கின்றனர், கர்ப்பத்திற்கான உயிரியல், உயிர் வேதியல் மாற்றங்கள், குடும்பம் மற்றும் தனிப்பட்ட உறவுகளில் ஏற்படும் மாற்றங்கள், சமூக பொருளாதார பிரச்சினைகள், கர்ப்பம் தொடர்பான மருத்துவ மகப்பேரியல் காரணிகள், குழந்தைகளின் சுகாதாரப் பிரச்சினைகள் கர்ப்பிணிகளின் மன அழுத்தத்திற்கான காரணங்களாகும் (Dunkal Schetter & Van Bussel, 2011).

ஒரு தாய் கர்ப்பிணியாக இருக்கும்போது அவளைக் கவனமாக பராமரிக்க வேண்டும். ஏனெனின், தாயின் உடல், உள, உணர்வு ரீதியான பாதிப்புக்கள் கருவில் உள்ள குழந்தையிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. என்று நவீன மருத்துவ ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன(இத்ரீஸ், 2001). தாயின் வாழ்வுடன் குழந்தையின் வாழ்வு நேரடியாகத் தொடர்புபடுகின்றது. எனவே தான் இஸ்லாம் இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்துகின்றது. கர்ப்பிணித் தாய்மார்களுக்கு நோன்பை விடுவதற்கு அனுமதித்துள்ளது. ஏனெனில் தாயின் உடல், உள, உணர்வு ரீதியாக அவர்களுக்கோ அவர்களது கருவிலுள்ள சிசுவுக்கோ அபாயம் ஏற்படக்கூடாது என்பதனாலாகும். நபி(ஸல்) அவர்கள் இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்தியிருக்கிறார்கள், கீழ் வரும் ஹதீஸ் இதற்கு சிறந்த உதாரணமாகும். இம்ரான் பின் ஹுஸைன் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ''ஒருமுறை ஜுஹைனா என்ற கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு பெண் விபச்சாரம் மூலம் கர்ப்பிணியான நிலையில் நபி (ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே! நான் (ஹத்) தண்டணை பெறக்கூடிய விபச்சாரக் குற்றத்தை செய்து விட்டேன். எனக்குரிய தண்டனையை நிறைவேற்றுங்கள் எனக் கேட்டுக் கொண்டாள். அப்போது நபியவர்கள் அவர்களுடைய பாதுகாவலரை அழைத்து அவள் குழந்தையைப் பெற்றெடுக்கும் வரை அவளுக்கு உபகாரம் செய்யுமாறு பணித்தார்கள்'' (ஸஹீஹுல் முஸ்லிம், கிதாபுல் ஹஹுதூத், 1696).

இங்கு நபியவர்கள் தண்டனை நிறைவேற்றாமல் பிற்படுத்தியமைக்கும் அவளுக்கு உபகாரம் கேட்டுக் கொண்டமைக்குக் காரணம், தண்டனை மூலம் அத்தாயின் உள, உணர்வுகள் பாதிப்படைந்து அதனால் அவளது வயிற்றில் இருக்கின்ற சிசுவின் ஆரோக்கியத்தில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது என்பதனாலாகும். எனவே விபச்சார குற்றத்தைச் செய்த ஒரு கர்ப்பிணித்

தாயிற்கும், அவளது அந்த சிசுவுக்கும் நபியவர்கள் இவ்வளவு கண்காணிப்பும், முக்கியத்துவமும் கொடுத்தார்கள் என்றால், எக்குற்றமும் செய்யாத கர்ப்பிணித் தாய்மார்களும் அவர்களது சிசுக்களும் நாம் எவ்வளவு கண்காணிப்பு செலுத்தியாக வேண்டும்? எனவே இக்காலப் பகுதியில் கர்ப்பிணித் தாய்மார்கள் மிகவும் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். அவர்களை கணவன்மார்கள் உளரீதியாகவும், உணர்வுரீதியாகவும் பாதிப்புக்குட்படுத்தக் கூடாது. அதிகமாக கவலையூட்டல், கஷ்டப்படுத்தல், தொந்தரவு செய்தல், அதிர்ச்சிக்குள்ளாக்குதல் என்பன கருவிலுள்ள அவர்களது சிசுக்களுக்கு எதிரான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது (இத்ரீஸ், 2001).

உளவியல் ஆய்வாளர்களின் கருத்துப்படி, அதிகமான குழந்தைகள் பிறந்த பின்னர் அபாயகரமான நோய்களுக்குக்குட்படக் காரணம் அவர்கள் கருவில் இருந்தபோது ஏற்பட்ட பாதிப்புக்களினாலேயாகும். என உறுதிப்படுத்துகின்றனர். இக்காலங்களில் கர்ப்பிணித்தாய்மார்களை மகிழ்வித்தல், அமைதியடையச் செய்தல், பாதுகாப்பு உணர்வுகளைக் கொடுத்தல் என்பன முக்கியமானவையாகும். கணவன்மார்கள் இக்காலங்களில் அவர்களுடன் மிகவும் பொறுமையுடனும் புரிந்துணர்வுடனும் நடந்து கொள்ள வேண்டும். அத்துடன் மனைவியின் உடல் ஆரோக்கியத்திலும் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இங்கு குறிப்பிட்டுக் காட்ட வேண்டிய ஓர் அம்சம் இன்று எமது சமூகத்தில் கருக்கலைப்பு (Abortion) செய்வதாகும். இதனை இஸ்லாமிய அறிஞர்கள். நவீன ஜாஹிலிய்யத் என்றே வர்ணிக்கின்றனர். அன்று குழி தோண்டிப் புதைக்கப்பட்ட குழந்தைகள் கருவறையில் கொலை செய்யப்படுகின்றார்கள். இது பற்றிய விரிவான விளக்கத்தை இஸ்லாம் வழிகாட்டியுள்ளது.

ஒரு பெண் தனது வயிற்றில் சிசுவை சுமக்கின்ற காலப்பிரிவு மிக அவதானமாக நடந்து கொள்ளவேண்டிய காலப்பிரிவு என அறிஞர்கள் விளக்குகின்றனர். அவளது உடலும், உள்ளமும் ஆரோக்கியமாக இருக்கவேண்டிய காலப்பிரிவாக இது காணப்படுகிறது. இக்கட்டத்தில் ஒரு தாய் கவனயீனமாக இருப்பதனால் ஏற்படும் பாதிப்புக்கள் குழந்தையின் சிந்தனை, உடல் ஆரோக்கியத்தை பாதித்து விடும் என்பது குறிப்பிடத்தக்கது. வயிற்றுள் இருக்கும் சிசுவின் உடல் ஆரோக்கியத்திற்காக தாய் மருத்துவ ரீதியான ஆலோசனைகளை பின்பற்ற வேண்டும்.

தூய்மையான உடலுக்குப் போஷாக்கூட்டக் கூடிய உணவுகள், விற்றமின் பெறப்படலாம். இவ்வாறே பிள்ளைகளின் உள ஆரோக்கியமும் முக்கியமானது. உமர் (ரழி), அலி (ரழி) போன்ற ஸஹாபாக்களும் ஷாபி (ரஹ்), அஹ்மத் (ரஹ்) போன்ற இமாம்களும், கணவன் மனைவி இருவரில் ஒருவருக்கு பாதகமான நோய்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அல்லது புத்திக் குறைபாட்டின் போது திருமண உறவை முறித்துக் கொள்வதனை அனுமதிக்கின்றனர். இது பற்றி விரிவான ஆய்வொன்றை மேற்கொண்ட AlexisCarel பின்வருமாறு விளக்குகின்றார். *‘பல வகையிலும் தரித்திரத்திற்கு உள்ளானோர், குடிகாரர்கள், தொழுநோயால் பீடிக்கப்பட்டோர், பாரம்பரிய மூளைக் கோளாறுகள் உள்ளோரிடையே திருமணம் நடப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். நோயாளிகள், நெறிகெட்டோர்கள், சராசரி அறிவுத்தரத்தை பெறாதோர், சந்ததி பெருக்கம் செய்வது பாரிய குற்றமாகும். இதனால் மோசமான சந்ததிகள்*

*உருவாக்கப்படுவர்'* மேலும் அப்துர்ரஹ்மான் ஷஹ்ரஸ்தானி எனும் அறிஞர் ''உஸூலுஸ் ஸிஹ்ஹா வல் ஹயாத்'' எனும் தமது பிரபல்யமான நூலில் பின்வருமாறு விளக்குகிறார். *''தான் பயங்கரமான நோயால் பீடிக்கப்பட்டு இருக்கிறேன் என்ற உணர்வோடு தன் மனைவியை நெருங்குவோரின் பிள்ளை தாழ்வு மனப்பான்மை கொண்டதாக இருக்கும். குடிகாரன், உணர்ச்சி வசப்படக்கூடியவர்களது பிள்ளைகள் அறிவு குறைந்தவர்களாகவும், உணர்ச்சி வசப்படக்கூடியவர்களாகவும் இருப்பர். எப்போதும் நல்லதையே எதிர்பார்ப்பது, நல்லபடியே நோக்குவோரின் பிள்ளைகள் பயம், குழப்பமான எண்ணங்கள், மோசமான பழக்கம் அற்றவர்களாகவும் காணப்படுவர். கோபப்படுவோரின் குழந்தை அவசரமாக உணர்ச்சி வசப்படக்கூடியதாய் இருக்கும். பெண்ணின் உடல், உள காரணிகள் கர்ப்பத்தில் இருக்கும் குழந்தை மீது தாக்கத்தை செலுத்தும்''.* குழந்தையை வயிற்றில் சுமந்திருக்கும் தாய் இஸ்லாமிய உணர்வும் பயபக்தியும் நிரம்பியவளாகவும், அல்குர்ஆனை அதிகம் ஓதுபவளாகவும், திக்ர் அவ்ராதுகளில் ஈடுபாடுள்ளவளாகவும் இருப்பின் குழந்தைகள் மிகவும் சிறிய பராயத்திலேயே இவ்வாறான பழக்க வழக்கங்களை கைக்கொள்வர். ஒரு தாய் தனது வயிற்றிலுள்ள குழந்தையின் எதிர்காலம் தொடர்பில் அதிகபடியான ஆர்வம் கொண்டவளாகவும் தனது குழந்தை எவ்வாறான நற்கருமங்கள் மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணங்களை தன்னுள் ஏற்படுத்திக் கொள்வதானது தாயினுடைய எண்ணங்கள் குழந்தையிடம் சென்றடைவதாக அமையும். மேலும் தாய் தனது குழந்தைக்காகவேண்டி மேற்கொள்ளும் துஆ பிரார்த்தனை தொடர்பில் அல் குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

''என்னுடைய இறைவா! நீ எனக்கு ஸாலிஹான ஒரு நன்மகனை தந்தருள்வாயாக'' (அல்குர்ஆன்,37:100), ''இறைவனே! உன்னிடமிருந்து எனக்காக ஒரு பரிசுத்தமான சந்ததியைக் கொடுத்தருள்வாயாக! நிச்சயமாக நீ பிரார்த்தனையைச் செவிமடுத்தருள்வோனாக இருக்கின்றாய்'' (அல்குர்ஆன்,3:38). மேலும் இந்தக் குழந்தையையும் இதன் வழித்தோன்றல்களையும் சபிக்கப்பட்ட ஷைத்தானிடமிருந்து பாதுகாக்குமாறு உன்னிடம் நான் வேண்டுகிறேன் (என இம்ரானின் துணைவியார் இறைவனை வேண்டினார்) 'எனும் (திருக்குர்ஆன், 03:36) வது இறைவசனத்தை ஓதிக் கொள்ளுங்கள்' என்று கூறினார்கள் (ஸஹீஹ் புகாரி, 4548). இவ்வாறாக குழந்தை பாக்கியத்தை பெற்றவர்கள் அல்லாஹ்விடம் மேற்கூறியவாறு பிரார்த்திப்பதுடன் அல்லாஹ் தான் நாடியோருக்கு இலகுவாக சிறுவயதினிலேயே குழந்தை பாக்கியத்தை வழங்குகிறான், அல்லாஹ் தான் நாடியவரை மலடாக ஆக்குகிறான், இன்னும் சிலருக்கு வயோதிப வயதினில் குழந்தை பாக்கியத்தை வழங்குகின்றான் என்றும் இறைவன் மீதான நம்பிக்கையுடையவளாகவும் இருக்க வேண்டும். சமகாலங்களில் சில பெற்றோர்கள் தமது கர்ப்பகாலங்களில் தமது குழந்தையின் எதிர்காலம் தொடர்பில் திட்டமிடலின்மை, குடும்பங்களுக்கிடையில் முரண்படல், ஆரோக்கியமற்ற உட, உள நடத்தைகளைக் கொண்டிருத்தல் போன்ற விடயங்களை கொண்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. எனவே கருவரையில் குழந்தையை பராமரித்தல் என்பது இஸ்லாமிய குழந்தை வளர்ப்பில் மிக முக்கியமான பகுதியாக காணப்படுவதுடன் எதிர்கால ஸாலிஹான குழந்தையினை உருவாக்குவதற்கும் துணை புரிகின்றது என்பதனை ஒவ்வொரு பெற்றோர்களும் அறிந்திருக்க வேண்டியதுடன் தங்களது

குழந்தைப் பராமரிப்பினை கர்ப்ப காலத்திலிருந்து மேற்கொள்ள வேண்டும் எனும் அவசியத்தை உணர்த்தும் வகையில் இவ்வாய்வானது முக்கியத்துவப்படுத்தப்படுகின்றது.

**2. ஆய்வுப்பிரச்சினை**

பெற்றோர்கள் வயிற்றுள் இருக்கும் சிசுவின் உடல் ஆரோக்கியத்திற்காக மருத்துவ ரீதியான ஆலோசனைகளை பின்பற்றுவதுடன் உடலுக்குப் போஷாக்கூட்டக் கூடிய உணவுகள், விற்றமின்கள் பெற்று தங்களது குழந்தைகளினது உடல் ஆரோக்கியத்தில் அதிகபடியான அக்கறை காட்டும் அதேநேரம் பிள்ளைகளின் உள ஆரோக்கியமும் முக்கியமானதாகும். தாய்மார்கள் தங்களது குழந்தைகளை கருவில் சுமக்கின்ற காலப்பகுதியில் பல்வேறு அழுத்தங்களுக்கு ஆளாகின்றனர் (Dunkal Schetter, 2011) என்ற கருத்திற்மமைவாக தாய்மார்களின் உளவியல் ரீதியான அழுத்தங்களுக்கான தீர்வினை பெற்றுக் கொடுக்கும் வகையில் இஸ்லாம் பல்வேறு வழிகாட்டல்களை வழங்கியுள்ளன. இதனை ஆய்வுப் பிரதேசத்திலுள்ள பெற்றோர்கள் அறிந்து தங்களது கர்ப்பகால குழந்தைப் பராமரிப்பில் இஸ்லாமிய நடைமுறைகளை பின்பற்றியுள்ளார்களா? என்பதில் ஐயப்பாடு நிலவுகிறமை ஆய்வினது பிரச்சினையாகும். ஆய்வுப் பிரதேசத்தினுடைய பெற்றோர்கள் தங்களது குழந்தை வளர்ப்பில் இஸ்லாமிய நடைமுறைகளை முழுமையான அளவில் பின்பற்றவில்லை என்பதும் ஆய்வின் மூலம் ஆய்வுப் பிரதேசத்தில் அறியப்பட்டதாகும் (களஆய்வு, 2020). எனவே இவ்வாய்வு பிரச்சினைக்கமைவாக பெற்றோர்கள் தங்களது கர்பகாலங்களில் இஸ்லாமிய வழிகாட்டல் நடைமுறைகளை பின்பற்றியுள்ளனரா? என்பதனை ஆய்வு வினாவாக கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வானது கர்ப்ப காலத்திலிருந்து தங்களது குழந்தைகளினது எதிர்காலம் தொடர்பில் ஒவ்வொரு பெற்றோர்களும் சிந்தித்து குழந்தை வளர்ப்பை மேற்கொள்ள வேண்டும் என்ற அவசியத்தை வலியுறுத்தும் வகையில் இவ்வாய்வு அமையப்பெற்றுள்ளது.

**3. ஆய்வு நோக்கங்கள்**

- முஸ்லிம் தாய்மார்களின் கர்ப்பகால நடைமுறைகள் இஸ்லாமிய வழிகாட்டல்களின் அடிப்படையில் அமையப் பெற்றுள்ளனவா? என்பதனைக் கண்டறிதல்.
- முஸ்லிம் தாய்மார்கள் கர்ப்பகாலங்களில் எதிர்நோக்கும் சவால்களை இனங்காணல்

**4. ஆய்வு முறை**

இவ்வாய்வானது அளவு ரீதியான ஆய்வாக மேற்கொள்ளப்பட்டது. திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேசத்திலிருந்து 16 கி.மீ தொலைவிலுள்ள கிராமம் தோப்பூராகும். இக்கிராமம் 39.9 ஏக்கர் பரப்பளவைக் கொண்டுள்ளது. இவற்றில் தோப்பூர் பிரதேசத்திலிருந்து சனத்தொகை காரணமாக பிரிந்த தோப்பூர் (216), பாலத்தோப்பூர் (216C), அல்லை நகர் கிழக்கு (216A), அல்லை நகர் மேற்கு (216E) எனும் நான்கு கிராமசேவகப் பிரவுகளை மாத்திரம் உள்ளடக்கியதாக இவ்வாய்வு


ISBN 978-624-5736-14-0

மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நான்கு பிரதேசங்களில் 2296 குடும்பங்கள் வாழ்கின்றனர். இவர்களின் சனத்தொகை 7833 எண்ணிக்கையாக காணப்படுகிறது. அந்த வகையில் இவ்வாய்வுக்கு 200 குடும்பங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களிடம் பெறப்பட்ட தரவானது, அளவியல் வினாக்கொத்து மூலமாகக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டது. அவர்களில் குழந்தைகளையுடைய (20–60) வயதிற்குற்பட்ட பெற்றோர்களிடம் இருந்து தகவல்கள் சேகரிக்கப்பட்டன. தொழில் ரீதியான வேறுபாடு (வியாபாரம், விவசாயம், அரச உத்தியோகத்தர், சுயதொழில்) கல்வித்தகைமை ஆகியவை மாதிரித் தெரிவில் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களின் தகவல்கள் மூலமாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அத்தோடு ஆய்வின் கோட்பாட்டு அம்சங்களைப் பெற புத்தகங்கள், ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் வெளியிடப்பட்ட பிற ஆவணங்களிலிருந்து இரண்டாம் நிலைத்தரவுகள் சேகரிக்கப்பட்டன. பெற்றோர்களிடம் மேற்கொள்ளப்பட்ட வினாக்கொத்து தரவுகளானது Excel மென்பொருள் துணையுடன் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளதோடு அவை அட்டவணை மற்றும் வரைபடம் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

## 5.1 தகவல் தருனர்களின் விபரம்

### 5.1.1 வயதடிப்படையிலான விபரம்

தகவல் தருனர்களில் பெரும்பான்மையானோர் 41 வயதிற்கும் 50 இற்கும் இடைப்பட்டோர் ஆவர். இவர்கள் 39% மாகக் காணப்படுகின்றனர். அதிலும் 31 வயதிற்கும் 40 இற்கும் இடைப்பட்டோர் 36% மாக காணப்படுகின்றனர். இவ்விரு வயதிற்கும் இடைப்பட்டவர்களே தகவல் தருனர்களில் அதிகமாக உள்ளனர். இவர்கள் மொத்த வீதத்தில் 75% மாகும்.

**அட்டவணை : 5.1 தகவல் தருனரின் வயது ரீதியான பிரதிநிதித்துவம்**

| *வயது* | *எண்ணிக்கை* | *சதவீதம்* |
|---|---|---|
| ***20 – 30*** | 24 | 12% |
| ***31 – 40*** | 72 | 36% |
| ***41 – 50*** | 78 | 39% |
| ***51 – 60*** | 20 | 10% |
| ***60 ற்கு மேல்*** | 06 | 3% |
| ***மொத்தம்*** | 200 | 100% |

**மூலம் : அளவியல் வினாக்கொத்து ஆய்வு – 2020**

### 5.1.2 கல்வித்தகைமை தொடர்பான விபரம்

கல்வித் தகைமை அடிப்படையில் நோக்குகையில் தகவல் தருனர்களில் அதிகமானோர் பாடசாலைக் கல்வியை மாத்திரம் பெற்றவர்களாக 124 பேரும் மொத்த தகவல் தருனர்களில் இவர்கள் 62% கொண்டோர் ஆவர். முறைசார் கல்வியைப் பெறாதவர்களாக 22 பேரும் மொத்த தகவல் தருனர்களில் இவர்கள் 11% கொண்டோர் ஆவர். உயர் தரக் கல்வியைப் பெற்றவர்களாக 30 பேரும் மொத்த தகவல் தருனர்களில் இவர்கள் 15% கொண்டோர் ஆவர். மார்க்கக் கல்வி 8 பேரும் மொத்த தகவல் தருனர்களில் இவர்கள் 4% கொண்டோர் ஆவர். பல்கலைக்கழகக் கல்வி 10 பேரும் மொத்த தகவல் தருனர்களில் இவர்கள் 05% கொண்டோர் ஆவர். தொழிற் தகைமைக் கல்வி 06 பேரும் மொத்த தகவல் தருனர்களில் இவர்கள் 03% கொண்டோர் ஆவர். இவற்றை நோக்குமிடத்து முறைசார் கல்வியை பெறாதவர்களும் பாடசாலைக் கல்வியை மாத்திரம் பெற்றவர்கள் 146 பேர் காணப்படுகின்றனர். மொத்த தகவல் தரும் பெற்றோர்களில் இவர்கள் 73% மாக காணப்படுகின்றனர். அதிகமான தாய்மார்களின் கல்வித் தகைமை குறைவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

**அட்டவணை : 5.2 தகவல் தருனரின் கல்வித்தகைமை விபரம்**

| *கல்வித்தகைமை* | *நபர்களின் எண்ணிக்கை* | *சதவீதம்* |
|---|---|---|
| *முறைசார் கல்வியைப் பெறவில்லை* | 22 | **11%** |
| *பாடசாலைக் கல்வி* | 124 | **62%** |
| *உயர் தரக் கல்வி* | 30 | **15%** |
| *மார்க்கக் கல்வி* | 08 | **04%** |
| *பல்கலைக்கழகக் கல்வி* | 10 | **05%** |
| *தொழிற் தகைமைக் கல்வி* | 06 | **03%** |
| *மொத்தம்* | 200 | **100%** |

**மூலம் : அளவியல் வினாக்கொத்து ஆய்வு – 2020**

மேலும் இவர்களது குழந்தை வளர்ப்பு தொடர்பான அறிவினை கல்வியுடன் தொடர்புப்படுத்தி நோக்கும் போது இஸ்லாமிய குழந்தை வளர்ப்பு தொடர்பான முழுமையான அறிவை கல்வி மூலமாக பெறவில்லை. மாறாக இவர்களிடம் அறிவியல் ஆய்வின் மூலம் பெற்ற தரவின்படி இவர்களில் குழந்தை வளர்ப்பு தொடர்பாக ஆலோசனைகளைப் பெற்றவர்களாக 128 பேர் காணப்படுகின்றனர். இவர்கள் மொத்த தகவல் தருனர்களில் 64% மாக காணப்படுகின்றனர். இவர்கள் இஸ்லாமிய பயான்கள், கலந்துரையாடல்கள், பிள்ளைவளர்ப்பு தொடர்பான கூட்டங்கள், நூல்கள், மாத சஞ்சிகைகள், வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூலமாக குழந்தை வளர்ப்பு தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

தகவல் தருனர்களில் 72 பேர் எவ்விதமான குழந்தை வளர்ப்புத் தொடர்பாக ஆலோசனைகளையும் பெறவில்லை. இவர்கள் மொத்த தகவல் தருனர்களில் 36% மாக காணப்படுகின்றனர். இதனை அட்டவணை : 5.3 குழந்தை வளர்ப்பு தொடர்பான விபரங்கள் மூலம் அறியமுடிகின்றது.

**அட்டவணை : 5.3 குழந்தை வளர்ப்புத் தொடர்பான அறிவினை பெற்றுக் கொண்ட முறைகள் பற்றிய விபரம்**

| *அறிவினை பெற்றுக் கொண்ட முறைகள்* | *நபர்களின் எண்ணிக்கை* | *சதவீதம்* |
|---|---|---|
| ***வானொலி நிகழ்ச்சிகள் மூலம்*** | 40 | 20% |
| ***ஆலிம்கள் மூலம்*** | 20 | 10% |
| ***கற்ற கல்வியின் மூலம்*** | 20 | 10% |
| ***ஜமாத் பயணம் மூலம்*** | 10 | 5% |
| ***பெற்றோர்கள் மூலம்*** | 10 | 5% |
| ***உறவினர்கள் மூலம்*** | 10 | 5% |
| ***மக்தப் பயிற்சிநெறி மூலம்*** | 5 | 2.5% |
| ***பொதுச் சுகாதார மருத்துவ மாது மூலம்*** | 10 | 5% |
| ***கணவரின் வழிகாட்டலின் மூலம்*** | 3 | 1.5% |
| ***மொத்தம்*** | 128 | 64% |

**மூலம் : அளவியல் வினாக்கொத்து ஆய்வு – 2020 (200 நபர்கள் = 100%)**

**5.2 கர்ப்ப கால நடைமுறை தொடர்பான தகவல்கள்**

**அட்டவணை 5.4 கர்ப்ப காலத்தில் இஸ்லாமிய குழந்தை பராமரிப்புத் தொடர்பான பிரதேச நடைமுறைகள்**


| கர்ப்ப காலத்தில் இஸ்லாமிய குழந்தை பராமரிப்புத் தொடர்பான ஆய்வுப் பிரதேச நடைமுறைகள் | ஆம் | இல்லை |
|---|---|---|
| **கணவரின் அன்பு முழுமையாக கிடைக்கப்பெறல்** | 200 | 00 |
| **உளரீதியாக, உணர்வு ரீதியாக அமைதி கிடைக்கப் பெறல்** | 200 | 00 |


ISBN 978-624-5736-14-0

| | | |
|---|---|---|
| **குழந்தைக்காக துஆ பிரார்த்தனையில் ஈடுபடல்** | 200 | 00 |
| **அதிகமாக அல்குர்ஆன் ஓதுதல்** | 140 | 60 |
| **இஸ்லாமிய அறிவு தொடர்பான நிகழச்சியில் ஈடுபடுதல்** | 200 | 00 |
| **அதிகமாக திக்ர் செய்தல்** | 200 | 00 |
| **நூல்கள் வாசித்தல்** | 122 | 78 |
| **அல்குர்ஆனிய வசனங்களை மனனமிடல்** | 140 | 60 |

**மூலம் : அளவியல் வினாக்கொத்து ஆய்வு – 2020**

**வரைபு 5.1 கர்ப்ப காலத்தில் இஸ்லாமிய குழந்தை பராமரிப்புத் தொடர்பான ஆய்வுப் பிரதேச நடைமுறைகளின் விகிதாசாரம்**




**மூலம் : அளவியல் வினாக்கொத்து ஆய்வு – 2020 (200 நபர்கள் = 100%)**

அட்டவணை: 5.3 வினாக்களுக்கு ஏற்ப கர்ப்ப காலத்தில் இஸ்லாமிய குழந்தை பராமரிப்புத் தொடர்பான தோப்பூர் பிரதேச நடைமுறைகளின்படி கணவனின் அன்பு, அமைதியான வாழ்வு, குழந்தைக்கான துஆ பிரார்த்தனை, திக்ர், இஸ்லாமிய அறிவு தொடர்பான நிகழ்ச்சிகளில் பங்கு பற்றுதல் என்பன பெற்றோர்களால் 100% ஆன அளவில் பின்பற்றப்பட்டுள்ளன. ஆனால் அல்குர்ஆன் ஓதுதல், மனனமிடல் போன்ற நடைமுறைகளை நோக்கினால் 70% மான பெற்றோர்கள் ஆம் என்றும் 30%ஆனவர்கள் இல்லை என்றும், நூல்கள் வாசித்தல் தொடர்பான நடைமுறைக்கு 61% ஆனவர்கள் ஆம் என்றும் 39% ஆனவர்கள் இல்லை என்றும் பதிலளித்துள்ளனர். இவர்கள் அல்குர்ஆன் ஓதுதல், மனனமிடல், நூல்கள் வாசித்தல் என்பவற்றில் திருப்தியற்ற நிலைமையைக் கொண்டுள்ளனர். இதற்குக் காரணம் கல்வி ரீதியாக இவர்களின் நிலைமை பின்னடைந்து இருப்பது ஆகும். இதனை அட்டவணை: 4.3 தகவல் தருனர்களின் கல்வித்தகைமை விபரம் மூலம் அவதானிக்கலாம். இதில் 11%ஆன பெற்றோர்கள் முறைசார் கல்வியை பெறவில்லை, 62% ஆனவர்கள் பாடசாலைக் கல்வியை மாத்திரம் பெற்ற பெற்றோர்களாக இருப்பதனால் இதன் நடைமுறைகளில் பின் தங்கிய நிலை


ISBN 978-624-5736-14-0

காணப்படுவதனை அறிய கூடியதாக உள்ளது. இதன் தகவல்களை மேற்குறிப்பிட்ட அட்டவணை 5.3 ல் விரிவாக நோக்கலாம்.

**அட்டவணை: 5.4 கர்ப்ப காலத்தில் பெற்றோர்கள் எதிர்நோக்கிய சவால்கள் தொடர்பான விபரங்கள்**

| கர்ப்ப காலத்தில் பெற்றோர்கள் எதிர்நோக்கிய சவால்கள் | **ஆம்** | **இல்லை** | **சதவீதம்** |
|---|---|---|---|
| **கணவன் மனைவிக்கிடையில் முரண்பாடு ஏற்படுதல்** | 40% | 60% | 100% |
| **அதிக கவலை தரக்கூடிய நிகழ்வுகள் ஏற்படுதல்** | 58% | 42% | 100% |
| **அதிகமான கோபம், உணர்ச்சி வசப்படுதல்** | 100% | 00% | 100% |
| **கணவனை நீண்டநாள் பிரிந்து இருத்தல்** | 39% | 61% | 100% |

**மூலம் : அளவியல் வினாக்கொத்து ஆய்வு – 2020 (200 நபர்கள் = 100%)**

மேலும் இவ்வாய்வுப் பிரதேசத்தின் தகவல் தருனர்களான பெற்றோர்கள் கர்ப்ப காலத்தில் எதிர்நோக்கிய சவால்கள் தொடர்பான விபரங்களை நோக்குமிடத்து அதிகமான கோபம், உணர்ச்சி வசப்படுதல் என்பன 100% ஆன அளவில் காணப்பட்டுள்ளது. மேலும் கணவன் மனைவிக்கிடையில் முரண்பாடு 40% ஆன அளவில் இடம்பெற்றுள்ளதுடன் குடும்ப வன்முறை, தகாத வார்த்தைப் பிரயோகங்கள், மனஅழுத்தம், அதிக கவலை தரக்கூடிய நிகழ்வுகள், கணவனை நீண்டநாள் பிரிந்து இருத்தல் போன்ற விடயங்களும் பெற்றோர்களது கர்ப்ப காலங்களில் இடம்பெற்றிருப்பதனை அறிய முடிகின்றது. இதனுடைய தாக்கமானது தாய்க்கும், சேய்க்கும் இடையில் பல்வேறு உடல், உள, உணர்வு ரீதியான பல பிரச்சினைகள் ஏற்படுவதற்கு காரணமாக அமையும். எனவே இப்பிரதேசத்தில் இவ்வாறான நிகழ்வுகளின் மூலம் தாக்கத்திற்கு உட்பட்ட குழந்தைகளிடமும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் ஏற்படுவதற்கு அதிகபடியான வாய்ப்புக்கள் உள்ளன. காரணம் கர்ப்ப காலத்தில் பெற்றோர்கள் எதிர்நோக்கிய பல்வேறுபட்ட சவால்களாகும். மேலும் இது தொடர்பான விபரங்களை அட்டவணை 5.4 மூலம் அறியமுடியும்.

**பகுப்பாய்வு முடிவுகளும் கண்டறிதல்களும்**

இவ்வாய்வு முடிவுகளின்படி ஆய்வுப் பிரதேசத்தின் கர்ப்பகால குழந்தை வளர்ப்பு நடைமுறைகளில் அதிகபடியான செல்வாக்கைச் செலுத்தும் காரணியாக பெற்றோர்களினது கல்வித் தகைமை காணப்படுவதுடன் அவற்றில் அதிகமான இஸ்லாமிய நடைமுறைகளை பின்பற்றி தங்களது கர்ப்ப காலங்களில் இஸ்லாமிய போதனைகளை முறையாக பின்பற்றியவர்கள் முறைசார் கல்வியைப் பெற்றவர்களாவர்.

மேலும் முறைசார் கல்வியைப் பெறாதவர்களிடம் இஸ்லாம் கூறியிருக்கும் கர்ப்பகால நடைமுறை தொடர்பான அறிவு நிலை திருப்தியற்றதாக காணப்படுகின்றமை இவ்வாய்வின்


ISBN 978-624-5736-14-0

கண்டறிதலாகும். மற்றும் கணவனின் அன்பு, அமைதியான வாழ்வு, குழந்தைக்கான துஆ பிரார்த்தனை, திக்ர், இஸ்லாமிய அறிவு தொடர்பான நிகழ்ச்சிகளில் பங்கு பற்றுதல் என்பன பெற்றோர்களால் முழுமையான அளவில் பின்பற்றப்பட்டுள்ளதுடன் அல்குர்ஆன் ஓதுதல், மனனமிடல், நூல்கள் வாசித்தல் போன்ற நடைமுறைகளை கர்ப்பகாலத்தில் முழுமையானளவில் பின்பற்றப்படவில்லை இதற்கான காரணமாக குறிப்பிட்ட சில பெற்றோர்களிடம் கல்வியறிவில் பின்தங்கிய நிலை கண்டறியப்பட்டுள்ளது.

அதிகமான கோபம், உணர்ச்சி வசப்படுதல் போன்ற உளரீதியான அழுத்தங்கள் என்பன தாய்மார்களிடம் முழுமையான அளவில் காணப்பட்டுள்ளதுடன் கணவன் மனைவிக்கிடையில் முரண்பாடு குறிப்பிட்டளவில் இடம்பெற்றுள்ளதும் குடும்ப வன்முறை, தகாத வார்த்தைப் பிரயோகங்கள், மனஅழுத்தம், அதிக கவலை தரக்கூடிய நிகழ்வுகள், கணவனை நீண்டநாள் பிரிந்து இருத்தல் போன்ற விடயங்களும் பெற்றோர்களது கர்ப்ப காலங்களில் இடம்பெற்றிருப்பதானது இவ்வாய்வு பிரதேச கர்ப்பிணித் தாய்மார்கள் எதிர்கொண்டுள்ள சவால்களாக இணங்காணப்

இவ்வாறான நடைமுறைகளை நோக்குமிடத்து இப்பெற்றோர்களின் குழந்தைகளது எதிர்கால வாழ்விலும் இதனது தாக்கம் இடம்பெறுவதற்கான அதிகமான வாய்ப்புகள் உள்ளமையை இவ்வாய்வு மூலம் எதிர்வு கூற முடிவதுடன் இவற்றிலிருந்து விடுபட தாய்மார்கள் இஸ்லாமிய தூய வழிகாட்டல்களை பின்பற்றுவதன் மூலமும் கர்ப்ப காலம் மற்றும் ஏனைய காலங்களில் இவற்றை நடைமுறைப் படுத்துவதன் மூலமும் சிறந்த ஆளுமை மிக்க ஸாலிஹான குழந்தைகளை இவ்வுலகிற்கு சமர்ப்பிக்க முடியும் என்பதும் இவ்வாய்வின் பரிந்துரையாகும்.

**உசாத்துணைகள்**

Amuthenie Sugirtharan, Sivakanesan (2017). Dietary practices of pregnant mothers from different ethnic groups in the Batticaloa district,Sri Lanka. AGRIEAST journal of Agricultural Sciences. 11(1):25

Shaima Mohamed Hassan, Conan leavey & Jane S.Rooney(2019) .Exploring English Speaking Muslim Women's first -time maternity experiences: a qualitative longitudinal interview study.*BMC pregnancy and childbirth*. https://doi.org/10.1186/s12884-019-2302-y

Mona pakzad, Mahrokh Dolatian & Farzaneh Alidoust Dargah .The Correlation between Islamic Liestyle and Pregnancy-Specific Stress: A Cross-Sectional,Correlational Study. *open access Macedonian journal of medical sciences*

Byron J. Stoyles. The Value Of Pregnancy and the Meaning Of Pregnancy Loss(2015) .*journal of social philosophy.46(1).* DOI:10.1111/josp.12088

Dunkel schetter c. psychological science on pregnancy: stress, processes, biopsychosocial models, and emerging research issues(2011). *annu Rev Psychol*. 2011;62:531-58. https://doi.org/10.1146/annurev.psych.031809. 130727 PMid:21126184.

Abu Thalib, M.M., Dewan, M.H. (2016). Child labour: Islamic perspective. *ESTEEM Journal of Science and Technology 12 (2), 15-30*

AgusRahmadi, IndrayaniIndrayani, NelilMudarris&JanuarRahmawati . (2018). What are Moslem Women's Activities During Pregnancy? *Article in Pakistan Journal of Medical and Health Science*.

இத்ரீஸ், ஏ.பி.எம். (2001). *குழந்தைகளும் வாழ்வும்.* தெஹிவல, ஏ.ஜே.பிரின்ட்

ஜமாலுத்தீன், ஆ. (2001). *இஸ்லாத்தில் குடும்ப இயல்.* சென்னை: புர்கான் பப்ளிகேஷன்.

அப்துர் காதர் உமரி, எம். எம். (2003) *வாழ்க்கை கலை.* சென்னை: இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட் பப்ளிகேஷன்.

அப்துல் அஸீஸ், ஏ. எம். (1996). *இஸ்லாம் காட்டும் ஆரோக்கிய வாழ்வு.* தஞ்சாவூர்: அன்ஸார் பப்ளிகேஷன்.

அப்துர் ரஹ்மான்இ எம் (2011). *நபிகளாரின் பொன்மொழிகள்.* ஸஹீஹுல் புகாரி- பாகம் ஐந்து சென்னை: ரஹ்மத் அறக்கட்டளை

முஹம்மது பஷீர், எஸ். இ. (1993). *இஸ்லாத்தில் கணவன் மனைவி கடமைகளும் குழந்தை வளர்ப்பும்.* தஞ்சாவூர்: காஜியார் புக் டிப்போமா.

அமீன், எம்.ஜே. எம். (2008). *இஸ்லாத்தில் குடும்ப வாழ்வு*, ஹெம்மாத்தகம: அல்ஹஸனாத் பதிப்பகம்


ISBN 978-624-5736-14-0